முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1090

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

23.09.2022, வெள்ளிக்கிழமை

1. ஓமென்ற மகா சூட்சும பலத்தை
உயர்வாக தவம்பெற்று வரமாய் கண்ட
ஓங்கார ஞானியே அரங்கா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே உமக்கு
2. உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசிதனை
உயர்வாக சுபகிருது நங்கைதிங்கள் உரைப்பேன்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 06ம் நாள், 23.09.2022 வெள்ளிக்கிழமை)
நேமமுடன் அரங்கன்அவதாரத்தை
நிலவுலகில் அறிந்துகொண்ட மக்களெல்லாம்
3. எல்லோரும் ஞானிகளாவது உறுதி
எல்லோரும் ஞானஆட்சி காலத்தை
வல்லமைபட அரங்கன் துணைகொண்டு
வையகத்தில் படைப்பதும் உறுதிஉறுதி
4. உறுதிதந்து ஆறுமுகன் நித்தம்நித்தம்
ஓங்காரனுக்கு சக்தியூட்டி வர
கருதி அரங்கன் அறவேலிக்குள்ளே
கருணைகொண்டு இணைந்த மக்களெல்லாம்
5. மக்களெல்லாம் நாமஜெபம் செய்தால்போதும்
மகான் சுப்ரமணியப்பெருமான் என்அருள்பலம் கூடி
தேக்கமின்றி பிறவாபெரும்பேற்றை
தேசிகன்வழி அடைந்து உயரநேரும்
6. நேர்மைபட அரங்கன் தர்மத்தை நிலவுலகில் நிர்வகிக்கும் மக்களெல்லாம்
வறுமை துன்பங்கள் விலகியோடி வளமான வாழ்வும் பாதுகாப்பும்
பாதுகாப்போடு இனிபிறவாத பேற்றை
பழுதின்றி அரங்கன் திருவடிபற்றியே அடையநேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–